வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 03.10.2024 வியாழக்கிழமை இதழ் : 277 பக்கங்கள் : 12

# இலங்கை அரசுக்கு மேலும் ஓராண்டு காலஅவகாசம்!

## ஐ. நாவில் அமெரிக்கா பெற்றுக்கொடுக்கும்

கொழும்பு, ஒக்ரோபர் 02

**"இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான நிலவரங்கள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சந்திப்பில்,

11

## ஜனநாயக த. தே. கூட்டணியின் சின்னமாக 'சங்கு' அங்கீகாரம்!

கொழும்பு, ஒக். 03

சங்கு சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சின்னமாக தேர்தல்கள் திணைக்களம் அங்கீகரித்துள்ளது. இதனால், வரும் பாராளுமன்றத் தேர்தலில் அந்தக் கூட்டணி சங்கு சின்னத்திலேயே களமிறங்கவுள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்குவதற்காக தமிழ்ப் பொது அமைப்புகள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பை தோற்றுவித்தன. பொதுக் கட்டமைப்பின் சார்பில் களமிறக்கப்பட்ட பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் சுயேச்சையாக சங்கு சின்னத்தில் போட்டியிட்டு 2 இலட்சத்து

11

## நாளை வருகிறார் ஜெய்சங்கர்! தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு!!

கொழும்பு, ஒக். 03

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை வரவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் புதிய அரசு அமைந்துள்ள நிலையில், இந்த நாட்டுக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரி இவராவார்.

11

### தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில்

## வடக்கு ஆளுநர் செயலகத்தில் மூவருக்கு திடீரென இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 03

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடமையாற்றி வந்த மூவருக்கு திடீரென இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆளுநர் செயலகத்தில் கடமையாற்றிய ஆளுநர் செயலக காணி உதவி ஆணையாளர், அபிவிருத்தி உதவியாளர் மற்றும் சாரதி ஆகியோருக்கே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக என். வேதநாயகன் பொறுப்பேற்று ஒரு வாரம் முடிவதற்கு முன்னர் குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்கவேண்டிய நேரம்

### அநுரவுக்கு சவால் விடும் நாமல்




கொழும்பு, ஒக். 03

ராஜபக்ஷ ஆட்சியின்போது பொது நிதியை கொள்ளையடித்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

11

## தோல்வி பயத்தால் எம் மீது அவதூறுகள்

### கூறுகின்றார் டக்ளஸ்



கிளிநொச்சி, ஒக். 03

தோற்றுப்போவோம் என்ற அச்சமும் காழ்ப்புணர்ச்சியுமே மீண்டும் எம் மீதான அவதூறுகளை இதர தமிழ் அரசியல் தரப்பினர் கையில் எடுக்கக் காரணம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பொதுச் சபை உறுப்பினர்கள், வட்டாரக் குழு உறுப்பினர்கள், மற்றும் கட்சி செயல்பாட்டாளர்

11

## திருமலை, அம்பாறையில் கூட்டு; கூட்டணி- தமிழ் அரசு ஆராய்வு!

கொழும்பு, ஒக். 03

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஆராய்ந்து வருகின்றன. குறித்த இரண்டு மாவட்டங்களிலும் தமிழர் பிரதிநிதித்துவத்தை

11

## ரணில் ஆதரவு அணி யானை சின்னத்தில்?

கொழும்பு, ஒக். 03

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவு அணியினர் யானை சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அறியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்திலோ அல்லது வேறு பொதுச்

11

## இரு கரங்களை உயர்த்தி அநுரகுமாரவுக்கு ஆதரவு

### மனோ கணேசன் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 03

"நீங்கள் உறுதியளித்த, உயிர்த்த ஞாயிறு படுகொலை சூத்திரதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கி பிணை முறி கொள்ளையரை தண்டிப்பது, சிவராம், நடேசன், எக்னெலிகொட, லசந்த உட்பட ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்களை

11

## ஐ. எம். எவ். திட்டத்துக்கு ஆஸியின் உதவி கிட்டும்

### அநுரவிடம் அந்நாட்டு உயர்ஸ்தானிகர் உறுதி

கொழும்பு, ஒக். 03

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்துக்கு அவுஸ்திரேலியாவின் உதவி கிட்டும் என்றும் இலங்கைக்குள் நேரடி முதலீடுகளை ஊக்குவிக்க அவுஸ்திரேலியா விருப்பத்துடன் உள்ளது என்றும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் போல் ஸ்ரிபென்ஸ் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் ஆஸி உயர்ஸ்தானிகருக்கும் இடையில் நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, இலங்கையுடனான

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் வகுப்புகளுக்கு செல்லும் சிறுவர்களுக்கு போதைப்பொருள்!

## 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் மீட்பு!

மன்னார், ஒக். 03

**தனியார் வகுப்புகளுக்கு வரும் சிறுவர்களுக்கு விற்பனை செய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளை மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.**

வட மாகாண விசேட அதிரடி சோதனைப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், தலைமன்னார் பொலிஸார் அம்பாள் நகர் பகுதியில் கூடுதல் வகுப்புகள் நடைபெற்று வரும் இடத்தின் முன்பு நேற்று முன்தினம் சோதனை நடத்தினர்.

இதன்போது, குறித்த இடத்துக்கு அருகாமையில் இருந்து சுமார் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான 108 கிராம் 350 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டனர்.

தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் சிறுவர்களை இலக்கு வைத்து இந்த போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# அதிக கட்டணத்தை வசூலிக்கும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஒக். 03

திருத்தப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களுக்கு எதிராக நேற்று முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் குறித்து பயணிகள் தெரிவிக்குமாறும் கேட்டுள்ளது.

இவ்வாறு இயக்கப்படும் மாகாணங்களுக்கு இடையேயான தனியார் பஸ்கள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கம் 1955 அல்லது வட்ஸ்அப் இலக்கம் 071 259 5555 இற்கு பயணிகள் முறைப்பாடுகளை அளிக்கலாம்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மற்றும் மாகாண பஸ் சேவை வழங்குநர்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட மாகாண அதிகார சபைக்கு 1958 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜெயவர்த்தன தெரிவித்தார். (அ)

# அரச பங்களாக்களை ஒப்படைக்காத 47 பேர்!

கொழும்பு, ஒக். 03

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 50 பேரிலுள் மூன்று பேர் மாத்திரமே அரசாங்க பங்களாக்களை மீள ஒப்படைத்துள்ளதாக பொது நிர்வாகம், நீதிமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றம் மற்றும் தொழிலாளர் அமைச்சின் உள்ளக தகவல்கள் கூறுவதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 10 பேர் வீடுகளை ஒப்படைப்பது தொடர்பில் விசாரித்திருந்த தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரசாங்க பங்களாக்களின் எண்ணிக்கை 50 ஆகும்.

அனைத்து அரசாங்க பங்களாக்களையும் மீள ஒப்படைக்குமாறு பொது நிர்வாகம், நீதிமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றம் மற்றும் தொழிலாளர் அமைச்சுகளுக்கு அண்மைய தினங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பங்களாக்களை மீள ஒப்படைக்காத முன்னாள் அமைச்சர்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது




யாழ்ப்பாணம், ஒக். 03

அனலைதீவு லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம், தீவக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டப் போட்டியில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

அனலைதீவு ஆர். ஆர். பிறதர்ஸ் புவனேஸ்வரி ட்ரான்ஸ்போர்ட்டின் பிரதான அனுசரணையுடன் தீவகத்தில் உள்ள 22 கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற இந்தப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பங்கேற்க அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணியும் நயினாதீவு இஸ்லாம் அணியும் தகுதி பெற்றன.

கடந்த வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை என மூன்று நாட்களாக அனலைதீவு பொது மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக தலைவர் தி. தனுசன் தலைமையில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற நயினாதீவு இஸ்லாம் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஓர் அணிக்கு 8 ஓவர்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நயினாதீவு இஸ்லாம் அணி 05 விக்கெட்களை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பில் கசான் 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணி வீரர் சார்ள்ஸ் இரண்டு ஓவர்கள் வீசி ஓட்டமெதுவும் விட்டுக் கொடுக்காமல் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

58 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணி 3.4 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து வெற்றி பெற்று அனலைதீவு லக்கி ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி சார்பில் தீபன் 34 ஓட்டங்களையும் சார்ள்ஸ் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இந்தத் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக நயினாதீவு இஸ்லாம் அணியின் கசானும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக புங்குடுதீவு வாரியஸ் அணியின் கஜேந்திரனும் தொடரின் சிறந்த சகலதுறை வீரராக இஸ்லாம் அணியின் கசானும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப்போட்டி - பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் பிரணவ சொரூபி கலந்து சிறப்பித்தார். இரண்டாமிடத்தை பிடித்த நயினாதீவு இஸ்லாம் அணியினருக்கான கிண்ணத்தையும் பணப்பரிசையும் அனலைதீவு ஆர். ஆர். பிறதர்ஸ் புவனேஸ்வரி ட்ரான்ஸ்போர்ட்டின் பொறுப்பாளர் ரமேஸ் குடும்பத்தினர் வழங்கி வைத்தனர். இதேவேளை, வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணியினருக்கான வெற்றிக் கிண்ணத்தையும் பணப் பரிசையும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த ஊர்காவற்றுறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் பிரணவ சொரூபி வழங்கிவைத்தார். (எ)

# வவுனியாவில் கட்டுப்பணத்தை செலுத்திய தமிழர் மரபுரிமை கட்சி

வவுனியா, ஒக். 03

நடைபெறவுள்ள இலங்கையின் பாராளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் சுயாதீனமாக போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை தமிழர் மரபுரிமை கட்சியினர் நேற்று வவுனியா தேர்தல் அலுவலகத்தில் செலுத்தினர்.

அந்தக் கட்சியின் தலைவர் நேசராசா சங்கீதன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப் பட்டது.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்த கட்சியின் தலைவர்- நாங்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் முல்லைத்தீவில் சுயேச்சைக் குழுவாக போட்டியிட்டு பல பிரதேச சபை உறுப்பினர்களை கொண்டுள்ள கட்சி நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இளம் சமுதாயத்துக்கு சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும். அதற்கான தளத்தை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

எமது கட்சியானது வடக்கு மற்றும் கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சுயேச்சையாக போட்டியிடும்-என்றார். (அ)

# தேசிய சமாதான பேரவையால் யாழ்ப்பாணத்தில் கருத்தமர்வு!

வடமராட்சி, ஒக். 02

தேசிய சமாதானப் பேரவை நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் கருத்தமர்வு ஒன்றை நடத்தியது.

தேர்தல் மற்றும் ஜனநாயகத்துக்கான செயலில் பிரஜைகள் என்ற தலைப்பில் இந்தக் கருத்தமர்வு நடைபெற்றது. நாட்டின் 25 மாவட்டங்களிலும் பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்து வரும் தேசிய சமாதானப் பேரவை அதன் தொடர்ச்சியாக இந்தக் கருத்தமர்வை நடத்தியது. இதில், இலங்கை தேசிய சமாதான பேரவையினர், சொண்ட் நிறுவனத்தின் பணியாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக மட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ-02)

# ஓராண்டுக்குப் பின் 300ரூபாவைவிட வீழ்ச்சியடைந்த அமெரிக்க டொலர்!

கொழும்பு, ஒக். 03

நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 290 ரூபாய் 30 சதம், விற்பனைப் பெறுமதி 299 ரூபாய் 35 சதமாகவும் பதிவாகியுள்ளது.

முன்னதாக கடந்த 2023 ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதி 298.91 ரூபாயாக காணப்பட்டது.

இந்நிலையில் ஒரு வருடத்திற்குப் பின்னர் அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதி ரூ. 300ஐ விட வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதேவேளை ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 384 ரூபாய் 28 சதம், விற்பனைப் பெறுமதி 399 ரூபாய் 22 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 319 ரூபாய் 75 சதம், விற்பனைப் பெறுமதி 333 ரூபாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.10.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பிரதிநிதித்துவங்களை பாதுகாத்தல்

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி ஓர் அலையை ஏற்படுத்தியிருக்கின்றது. அலை எப்போதும் கவர்ச்சிகரமான ஒன்றுதான். அலையில் பலர் அலையாக எடுபடுவதுண்டுதான். ஆனால், அலைகள் தொடர்பில் எப்போதும் எச்சரிக்கையுடனும் கவனமாகவும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாகிவிடும். தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் உண்டுதான். அவற்றில் ஏராளம் உண்மையானவை.

இன்று சாராய அனுமதிப் பத்திரம் தொடர்பில் விவாதிக்கப்படுகின்றது. நீதியரசர்கூட அதில் அகப்பட்டிருக்கிறாரெனக் கூறப்படுகின்றது. இது துரதிர்ஷ்டவசமானதுதான். மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதும் உண்மை. கோபப்படவேண்டிய விடயங்களுக்கு கோபப்படத்தான் வேண்டும். ஆனால், அதற்கான அலையில் அள்ளுண்டு போய்விட முடியாது.

வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாத்தல் என்பது தமிழ் மக்களின் அடையாளம் மற்றும் அங்கீகாரத்துடன் தொடர்புபட்டது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய எஸ். ஜே. வி.செல்வநாயகம் அவர்கள், "நான் உங்களுக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கித் தருவேன்", என்றார். தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களின் அடையாளமாகத்தான் இருந்தது - இப்போதும் அது முற்றிலும் அதன் செல்வாக்கை இழந்துவிடவில்லை.

உட்பூசல்களால் சில சிக்கல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையாயினும், அதற்காக தேசிய மக்கள் சக்தியுடன் ஒப்பிட்டு,அந்தக் கட்சியை நிராகரிப்பது தவறானது. அதேபோன்றுதான், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி. முன்னாள் ஆயுத இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் நீண்டகாலமாக பயணிக்கின்றனர். அவர்களில் பலர் பல தடவைகள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள். அவர்களில் பலர் ஒதுங்கி, புதியவர்களுக்கு இடமளிக்கவேண்டும் என்பதும் உண்மை.

இவ்வாறான அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து செல்லக்கூடிய இடங்களில் ஒன்றுபட்டும், தனித்துச் செல்லவேண்டிய இடங்களில் தனித்தும் போட்டியிடுவதில் பிரச்னையில்லை. ஆனால், எதைச் செய்தாலும் தமிழ் பிரதிநிதித்துவங்களைபாதுகாத்தல் என்னும் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கவேண்டும். கடந்தகால முரண்பாடுகள், கசப்பான அனுபவங்களை ஓரம்கட்டி,தமிழ் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாத்தல் என்னும் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தால் மட்டுமே, தேசிய மக்கள் சக்தி அலையிலிருந்து தப்ப முடியும். தேசிய மக்கள் சக்தி தொடர்பான மாயை ஒருவேளை தமிழ்த் தேசிய அரசியலை முற்றிலுமாகக் கேள்விக்குள்ளாக்கிவிடலாம். அவதானம் அவசியம்.

# விவசாயக் கண்காட்சி நேற்று யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 03

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் மூன்று நாள் விவசாயக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களம் மற்றும் வட மாகாண விவசாயப் பயிற்சி நிலையத்தில் கண்காட்சி நடைபெறுகின்றது. காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி தொனிப்பொருள் இம்முறை விவசாயக் கண்காட்சி முன்னெடுக்கப்படுகின்றது. மாகாண விவசாய பணிப்பாளர் செந்தில் குமாரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நேற்றைய நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கண்காட்சி நிகழ்வில் பிரதமர விருந்தினராக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் பங்கேற்றிருந்தார். வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், பொதுச் சபை ஆணைக்குழுவின் செயலாளர், யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானதுறை பீட தலைவர், திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் இரசாயன கிருமிநாசினிகள் இன்றி இயற்கை முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட மரக்கறிகள், தேன், காளான், போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், விற்பனையும் இடம்பெறுகின்றது.

தோட்டம், வீட்டுத் தோட்டச் செய்கை, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு முறைகள் தொடர்பில் கண்காட்சியில் விளக்கமளிக்கப்படுகின்றன.

(அ)

# விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஒக். 03

மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் நபரொருவர் உயிரிழந்தார். அவரின் இரு பிள்ளைகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது ஓட்டோ சாரதியான உயிரிழந்த நபர் மதுபோதையில் இருந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஓட்டோ சாரதி தெனியாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரதமரின் அலுவலகத்தில் காந்தி ஜெயந்தி அனுஷ்டிப்பு



கொழும்பு, ஒக். 03

இந்தியாவின் தேசபிதா என்றழைக்கப்படும் மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டது. இதன்போது பிரதமர் ஹரிணி அமரசூரியவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவும் மகாத்மா காந்தியின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். (அ)

# ரிஷாத்துடன் இந்திய தூதர் சந்திப்பு

கொழும்பு, ஒக். 30

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கட்சியின் தவிசாளர் எம். எஸ். எஸ். அமீர் அலி ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிற பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 03 வியாழக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாசி 17
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் தடையின்றி முடிவடையும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். அமைதி நிலவும்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**சிம்மம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள்.வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். மனநிறைவு கிட்டும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
வீரியத்தை விட காரியம் பெரிது என்பதை உணர்வீர்கள். நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**தனுசு**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைகேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உங்கள் வேலைகளை சுறுசுறுப்பாக முடித்துக் காட்டுவீர்கள். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**மகரம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறதியால் பிரச்னை வந்துநீங்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**மீனம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள்.வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். மேலதிகாரி உதவுவார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# அரசியல் இலாபத்துக்காக மக்களை குழப்பக்கூடாது

## அ. தி. மு. கவிடம் தி. மு. க. வலியுறுத்தல்

சென்னை, ஒக். 03

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் அரசியல் இலாபத்துக்காக மக்களை அ. தி. மு. க. குழப்பக்கூடாது என்று அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி வரை தண்ணீர் தேக்க நடவடிக்கை எடுக்கவில்லை என கண்டனம் தெரிவித்து அ. தி. மு. க. சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, அமைச்சர் துரைமுருகன் வெளியிட்ட அறிக்கையில்,

"முல்லைப் பெரியாறு அணை மற்றும் பேபி அணையை பலப்படுத்திய பிறகு அணை நீர்மட்டத்தை 142 அடியில் இருந்து 152 அடியாக உயர்த்தலாம் என உச்ச நீதிமன்றம் கடந்த 2006ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி உத்தரவிட்டது. முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றது முதல், முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே, அரசியல் இலாபம் கருதி, அண்டை மாநில நதி நீர் பிரச்னையில் வெற்று அறிக்கைகளை வெளியிட்டு, போராட்டங்களை அறிவிக்கும் அ. தி. மு. க., மக்களை குழப்பும் முயற்சிகளை விடுத்து ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும்"- என்று வலியுறுத்தியுள்ளார். (எ)

# "முதல்வர் மூலவர், உதயநிதி உற்சவர்"

புதுக்கோட்டை, ஒக். 03

"எங்களைப் பொறுத்தவரை மூலவர் முதல்வர் மு. க. ஸ்டாலின் என்றால், உற்சவர் துணை முதல்வர் உதயநிதி"- இவ்வாறு தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.



புதுக்கோட்டை, திருமயத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் கூறுகையில்;

"தமிழக அமைச்சரவை மாற்றம் தற்போது அடிக்கடி நடப்பதில்லை. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில், எந்த அமைச்சர் பதவியில் இருக்கிறார், யார் இல்லை என்பதை செய்தியைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு அமைச்சர்கள் அச்சத்துடன் இருந்தனர். ஆனால், தி. மு. க. ஆட்சியில் அமைச்சர்கள் சுதந்திரமாக செயல்படும் சூழலை முதல்வர் ஸ்டாலின் உருவாக்கியுள்ளார்.

மது ஒழிப்பை நாடு முழுவதும் கொண்டு வந்தால், தமிழகத்திலும் அதைச் செயல்படுத்த தி. மு. கவுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. மற்ற மாநிலங்களில் மது விலக்கு இல்லாமல், தமிழகத்தில் மட்டும் மது ஒழிப்பை கொண்டுவந்தால், கள்ளச் சாராயம் பெருகிவிடும்.

தமிழக அரசு இயந்திரத்தை முதல்வர் ஸ்டாலின் முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார். துணை முதல்வர் உதயநிதி, அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்"- என்றார். (எ)

# வரலாற்று நாயகர்களின் பிம்பமாக நிலைத்து நிற்பவர் சிவாஜி கணேசன்

## முதல்வர் ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஒக். 03

"தனது நடிப்பால் மக்களின் மனக்கண்ணில் வரலாற்று நாயகர்களின் பிம்பமாய் நிலைத்து நிற்பவர் சிவாஜி கணேசன்" என முதல்வர் மு. க. ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.



நடிகர் சிவாஜி கணேசனின் 97ஆவது பிறந்த நாளையொட்டி, அவரது சிலைக்கு தமிழக அரசு சார்பில் முதல்வர் மு. க. ஸ்டாலின் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். மறைந்த நடிகர் சிவாஜி கணேசனின் 97ஆவது பிறந்தநாள் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. சென்னை அடையாறில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் சிவாஜி கணேசனின் சிலைக்கு தமிழக அரசு சார்பில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்த முதல்வர் மு. க. ஸ்டாலினை சிவாஜி கணேசனின் மகன்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் வரவேற்றனர்.

பின்னர், மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புகைப்பட கண்காட்சியை முதல்வர் ஸ்டாலின் பார்த்து இரசித்தார். இதையொட்டி, முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில், "நடிப்புக்கும் நட்புக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்தவர் நடிகர் சிவாஜி கணேசன். தனது நடிப்பால் மக்களின் மனக்கண்ணில் வரலாற்று நாயகர்களின் பிம்பமாய் நிலைத்துவிட்ட அவரை பிறந்த நாளில் நினைவு கூர்ந்து போற்றுகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மது ஒழிப்பு மாநாட்டின் நோக்கம் மடைமாற்றம்

## திருமாவளவன் வேதனை

கள்ளக்குறிச்சி, ஒக். 03

விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு கொடுக்கப்பட்ட நெருக்கடிகளால் மது மற்றும் போதை ஒழிப்பு மகளிர் மாநாட்டு பணிகளில் கவனம் செலுத்த முடியவில்லை. மது ஒழிப்பு மாநாட்டின் நோக்கத்தையே மடைமாற்றம் செய்துவிட்டனர் என்று அந்தக் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம். பி. வேதனை வெளியிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி விரைவில் ஆரம்பம்

## இலங்கையிடம் ஜப்பான் உறுதி

கொழும்பு, ஒக். 03

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் கட்டம் மற்றும் தொலைக்காட்சி ஒளி பரப்பை டிஜிற்றல் மயமாக்குதல் போன்ற வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பிப்பது குறித்து ஜெய்க்கா நிறுவனம் ஜனாதிபதியின் செயலாளருடன் நேற்று முன் தினம் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டது.**

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் தலைமை பிரதிநிதி யாமோடா டெட்சூயா உள்ளிட்ட சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன் தினம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினர். ஜனாதிபதி செயலகத்திலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது.

ஜெய்க்கா நிறுவனத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப் பட்டு வரும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபி விருத்தி திட்டத்தின் இரண் டாம் கட்டம் மற்றும் தொலைக் காட்சி ஒளிபரப்பை டிஜிற்றல் மயமாக்குதல் போன்ற வேலைத் திட்டங்களை விரைவில் ஆரம் பிப்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஜெய்க்கா நிறுவனத்தின் உதவியுடன் நாட்டில் முன்னெ டுக்கப்படும் 11 வேலைத்திட் டங்களை விரைவில் நிறைவு செய்வது குறித்து அண்மையில் ஜப்பான் தூதுவர் மற்றும் ஜனா திபதிக்கு இடையிலான சந்திப் பின்போது கலந்துரையாடப் பட்டது.

அந்த செயற்பாடுகளை துரி தப்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் இரண்டாம் செய லாளர் கட்சுஹிரோ உள்ளிட் டோரும் இந்த சந்திப்பில் கலந் துகொண்டனர். (அ)

# காலணி உற்பத்தியாளர்களின் பிரச்னைகளை தீர்க்கவேண்டும்

## தொழிற்றுறை சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 03

காலணி உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைக ளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என காலணி மற்றும் தோல் உற்பத்தி தொழிற் றுறை சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அச்சங்கத்தின் தலைவர் புத்திக விமலசிறி இந்தக் கோரிக் கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடு காரணமாகவே ஆடைத் தொழில் வளர்ச்சி பெற்று உலகிலேயே முதலிடம் பெற்றது.

ஆயினும் காலணி உற்பத்தி தொடர்பில் எவரும் அக்கறை கொள்ளவில்லை. வெளிநாட் டில் உற்பத்தி செய்யப்படும் காலணிகளை வாங்கும் அரசி யல்வாதிகள் உள்நாட்டு உற்பத் தியாளர்கள் பற்றி அக்கறை கொள்வதில்லை.

வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் பல்வேறு வழிகளில் உள்நாட்டுக்கு கொண்டுவரப்ப டுகின்றன. அதனால் நாம் வினைத் திறனுடன் தயாரித்த பொருட் கள் விலைபோவதில்லை. இந்த விடயம் குறித்து தற்போதைய அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கிறேன். வெளிநாட்டிலி ருந்து காலணிகளைக் கொண்டு வருவதற்கு அரச அதிகாரிகளும் துணைபோகிறார்கள். ஒருவர் சுமார் 20 கிலோகிராம் என்ற அடிப்படையில் காலணிகள் கொண்டுவரப்படுகின்றன. இத னால் நாம் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளோம்-என்றார்.

# சட்டவிரோதமாக வாகனங்களை இறக்குமதி செய்தோர் கைதாகுவர்!

கொழும்பு, ஒக். 03

கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் சட்டவிரோதமான முறையில் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்து 50 பில்லி யன் ரூபாவுக்கு மேல் நட்டத்தை ஏற்படுத்தியவர்களை உடனடி யாக கைது செய்து நீதிமன்றத் தில் ஆஜர்படுத்துமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை பறிமுதல் செய்வதோடு மாத்திரம் நிற்கா மல், சட்டவிரோத இறக்குமதி யில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறும் கொழும்பு பிர தான நீதிவான் திலின கமகே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வுக்கு பணிப்புரை விடுத்துள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமான முறை யில் இறக்குமதி செய்யப்பட்ட 200 வாகனங்களில் 20 வாகனங் கள் திருப்பி அனுப்பப்பட்டுள் ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழு முன்வைத்த உண்மைகளை ஆராய்ந்த நீதிபதி இந்த உத்த ரவை பிறப்பித்தார். (அ)

# அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு; அடுத்த வரவு-செலவு திட்டத்தில் முடிவு!

கொழும்பு, ஒக். 03

அரச ஊழியர்களின் சம்ப ளத்தை அதிகரிப்பது தொடர் பில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானம் எடுக்கப் படும் என அமைச்சரவை ஊட கப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை கருத்திற் கொண்டு இவ்வாறான சம்பள உயர்வு சாத்தியமா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

சம்பள அதிகரிப்பு எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்ப டும் என்பதும் பல கட்டங்க ளில் செய்யப்படுமா என்பதும் வரவு-செலவுத் திட்ட சமர்ப் பிப்பின்போது கலந்துரையாடி தீர்மானிக்கப்பட வேண்டுமெ னவும் அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

எனினும், அரச ஊழியர்க ளின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே தமது அர சாங்கத்தின் கொள்கை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் குறைக்கப்பட்டது!

கொழும்பு, ஒக். 03

எரிபொருள் விலை குறைப் புக்கு இணையாக கொள்கலன் போக்குவரத்து கட்டணம் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் 4 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள தாக கொள்கலன் உரிமையாளர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி விளக்கமளித்த சங்கத்தின் தலைவர் சனத் மஞ் சுளா-

அரசாங்கத்தின் தீர்மானத் துக்கு அமைவாக ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை தற் சமயம் 24 ரூபாவாகவும், முன்னர் 10 ரூபாவாகவும் குறைக்கப்பப் பட்டுள்ளது.

அந்த விலைகளுடன் ஒப்பி டுகையில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கலன் போக்கு வரத்து கட்டணத்தை 4 வீதம் குறைக்க முடிவு செய்யப்பட் டது.

தற்போது ஒட்டுமொத்த பொதுமக்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை குறைக்க எங்கள் செயற்குழு முடிவு செய்தது-என்றார். (அ)

# காற்றாலை, கனிய மணல் அகழ்வை நிறுத்துமாறு ஜனாதிபதி, பிரதமருக்கு செல்லும் தபாலட்டைகள்!

## மன்னாரில் இருந்து மக்கள் அனுப்பிவைப்பு

மன்னார், ஒக். 03

மன்னாரில் முன்னெடுக்கப் பட்டு வரும் காற்றாலை மின்சா ரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயல்பாடுகளை நிறுத்தக் கோரி ஜனாதிபதி மற் றும் பிரதமருக்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் தபால் அட்டை மூலம் கோரிக்கைகள் முன் வைக்கும் நடவடிக்கைக்கு அமைவாக மக்களிடம் பெற் றுக் கொள்ளப்பட்ட தபாலட் டைகள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் தபாலகத்தில் அஞ்சல் செய்யப்பட்டன.



மன்னார் தீவில் முன்னெடுக் கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயல்பா டுகளை நிறுத்தக் கோரி ஜனாதி பதி மற்றும் பிரதமருக்கு அழுத் தத்தை கொடுக்கும் வகையில் தபால் அட்டை மூலம் கோரிக் கைகள் முன் வைக்கும் நடவ டிக்கை கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளா தார மேம்பாட்டுக்கான நிறுவ னத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் பஸ் தரிப்பிடத்தில் இது ஆரம்பிக் கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மன் னார் தீவு பகுதியில் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக மக்களிடம் தபாலட்டைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக முன் னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற் றும் கனிய மணல் அகழ்வு நட வடிக்கைகள் இடம்பெற்று வரு கின்ற நிலையில் மக்கள் தொடர்ச் சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வந்தனர்.

கடந்த காலங்களில் ஜனாதி பதி, பிரதமர் உள்ளிட்டவர்களி டமும் கோரிக்கைகளை முன் வைத்தபோதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு குறித்த திட்டத் தின் பாதகத்தையும் இத் திட் டம் மக்களுக்கு எதிரானது என் பதை வலியுறுத்தும் வகையி லும் கொழும்பில் உள்ள அலுவ லகங்களுக்கு மக்களின் கோரிக்கை அடங்கிய தபால் அட்டைகள் இவ்வாறு அனுப்பி வைக்கப்ப டுகின்றன.

புதிய ஜனாதிபதி தனது தேர் தல் பிரச்சாரங்களின் போது மன்னார் தீவில் அமைக்கப்படும் காற்றாலை மின்சார திட்டத்தை தான் ஜனாதிபதியாக வந்தால் குறித்த ஒப்பந்தத்தை ரத்து செய் வதாக கூறியிருந்தார். இந்த நிலையில் இதனை வலியுறுத் தும் வகையிலும் குறித்த தபா லட்டை அனுப்பி வைக்கப்படு கிறது. (அ)

# பழங்காலப் பொருட்களை வைத்திருந்த இருவர் கைது!

கொழும்பு, ஒக். 03

பழங்கால அகழ்வாராய்ச்சி யில் இருந்து மீட்கப்பட்ட விலைமதிப்பற்ற மாணிக்கக் கற்கள் மற்றும் அரிய சிலைகள் உள்ளிட்ட மேலும் சில பொருட் களை ஒன்றை வைத்திருந்த இரு வர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பசறை முகாம் அதிகாரிக ளுக்கு கிடைத்த தகவலின் பிர காரம் பரமன்கட பிரதேசத்தில் இந்த சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்பு டைய இருவரும் கேகாலை ஹெட்டிமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 26 வயது மற்றும் 63 வயதுடையவர்கள் என பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரி வித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அநுரகுமாரவின் அரசில் 25 அமைச்சர்கள் மட்டுமே!

## இராஜாங்க அமைச்சர்கள் இல்லை

கொழும்பு, ஒக். 03

**எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கத்தை தேசிய மக்கள் சக்தியே அமைக்கும். அந்த அமைச்சரவையில் 25 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இடம்பெறுவர் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

அந்த புதிய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர்கள் எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் என தெரிவித்த அமைச்சர், அந்தந்த துறைக்கான நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுக்கும் வகையில் 25 பிரதியமைச்சர்களும் நியமிக்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களே தமது கட்சியில் உள்ளனர். இதனால் தற்போதைய அரசாங்கத்தில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரே இடம்பெறுகிறார். இதனால், அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது உறுப்பினரான நிபுண ஆராச்சியை மற்றும் ஒரு அமைச்சராக நியமிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சட்டப் பிரச்னை காணப்பட்டதால் அதனை மேற்கொள்ள முடியவில்லை.



அடுத்து அமைக்கப்படும் அரசாங்கத்தில் குறைந்தளவு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு மக்களுக்கான நிறைவான சேவை வழங்கப்படும்-என்றார்.

(அ)

# உரத்தின் தரத்தில் பெரும் சந்தேகம்!

## விவசாய அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 03

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உரத்தின் தரம் தொடர்பில் பாரிய சந்தேகம் நிலவுவதாக விவசாயிகள் தேசிய மாநாட்டின் இணைப்பாளர் விமல் வத்துஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிலுள்ள விவசாயிகள் உரத்தை நம்பியே தொழிலை முன்னெடுத்துச் செல்கின்றனர். இந்நிலையில் உரம் தொடர்பிலான பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து பல்வேறு தரப்பினர் உரத்தை இறக்குமதி செய்கின்றனர். அவற்றின் தரம் குறித்து பரிசோதனை செய்யப்படுவதில்லை.

கப்பல்களிலிருந்து நாட்டுக்கு கொண்டுவரும்போது உரத்தின் தரத்தையும் அவை சந்தையில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் போதான தரத்தையும் பரிசோதனை செய்ய வேண்டும். இதில் எமக்கு பாரிய சந்தேகம் உண்டு.

இந்த விடயத்தில் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம். நாம் அடுத்த கட்ட விவசாயப் பணிகளை ஆரம்பித்துள்ளோம். எனினும் இதுவரை உர மானியம் வழங்கப்படவில்லை. அதனை எதிர்பார்த்தே தொழிலை ஆரம்பித்துள்ளோம்.

ஆதலால் அமைச்சும் அதிகாரிகளும் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என நாம் கோரிக்கை விடுக்கிறோம்-என்றார்.

(அ)



# ஜனாதிபதி-கியூப தூதுவர் நேற்று சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, ஒக். 03

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கைக்கான கியூபா தூதுவர் அண்ட்ரஸ் மார்ஷலோ கொன்ஷாலேஸ் கொரிடோ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால இராஜதந்திர தொடர்புகள் மற்றும் நட்புறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்த கியூபா தூதுவர், ஜனாதிபதியின் தலைமைத்துவத்திற்கு பாராட்டு தெரிவித்தார். இலங்கையுடனான ஒத்துழைப்புக்களை பலப்படுத்த கியூபா எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில் கியூபா அடைந்த வெற்றி தொடர்பில் சுட்டிக்காட்டிய கியூபா தூதுவர், இலங்கைக்கு டெங்கு ஒழிப்புக்கு அவசியமான பொதுச் சுகாதார வேலைத்திட்டங்கள் தொடர்பிலான நிபுணத்துவ அறிவைப் பகிர்ந்துகொள்வதில் ஆர்வமாக இருப்பதாகவும் அறிவித்தார்.

(அ)

# ராஜரட்டை பல்கலைக்கழகத்தில் புதிய தொழில்நுட்ப பீடம் திறப்பு

கொழும்பு, ஒக். 03

ராஜரட்டை பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்ப பீடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை பணிப்பாளர் டகஃபுமி கடோனோ ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பீடத்தின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்காக 33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

புதிய பீடம் 2 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளதுடன், 800 இருக்கைகள் கொண்ட அரங்கம், 3 அடுக்கு நூலகம், பல விரிவுரை அரங்குகள், அதிநவீன ஆய்வகங்கள் மற்றும் சந்திப்பு அறைகள் கொண்டுள்ளது.

குறித்த பீடத்தின் கீழ், உயிரிச் செயலாக்க தொழில்நுட்பம், மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், தகவல்-தொடர்பாடல் மற்றும் பொருட்கள் தொழில்நுட்பம் ஆகிய 05 கல்வித் துறைகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

(அ)

# இரு குழுக்கள் மோதல் 17 வயது இளைஞன் பலி!

கொழும்பு, ஒக். 03

மஹவெல - மடவல உல்பத்த பிரதேசத்தில் இரு குழுவினரிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 17 வயதுடைய இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில், மடவளை உல்பத்த பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் இரும்பு கம்பி, முகக்கவசம் மற்றும் பல கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# துரோகிகளுக்கு வேட்பு மனு இல்லை

## மொட்டு கட்சி திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 03

கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு சென்ற எவருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.




இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது கட்சியைக் காட்டிக்கொடுத்த எவரும் மீண்டும் கட்சிக்கு வரமுடியாது. மக்களுக்கு வேண்டாம் என்றால் சலூன் கதவை பூட்டுவதற்கு தயார் என மஹிந்தவும் அறிவித்துவிட்டார். எனவே, அவர்களுக்கு வேட்பு மனு வழங்கப்படமாட்டாது.

மொட்டு கட்சிக்கு தற்காலிக பின்னடைவே ஏற்பட்டுள்ளது. நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை உள்ளது-என்றார்.

(அ)

# சம்பிக்கவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 03

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது கொழும்பு, ராஜகிரிய பகுதியில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த வழக்கை 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதிவாதி சம்பிக்க ரணவக்க நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

2016 பெப்ரவரி 28 ஆம் திகதி ராஜகிரிய பகுதியில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தி நபரொருவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை கட்டியெழுப்புவதற்காக சகலரும் கைகோர்க்கவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ அழைப்பு

கொழும்பு, ஒக். 03

**ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பை போலவே தோல்வியுற்ற தரப்புக்கும் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து கட்டியெழுப்பும் பொறுப்பு உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களுடன் மஹரகம பகுதியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றி பெற்றவர்களிடம் மட்டும் பொறுப்புகளை ஒப்படைப்பது வங்குரோத்தான நாட்டுக்கு ஏற்புடையதல்ல.

இதற்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் எதிர்க்கட்சி முன்னோடியான வேலைத் திட்டத்தைக் கொண்டிருக்கிறது.

அதிலிருந்து பின்வாங்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதேநேரம் கடினமான சூழ் நிலையில், பழமைவாத முறைகளுக்குச் செல்லாமல், புதிய வழிமுறைகளைக் கண்டறியும்



திட்டத்திற்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விமர்சனங்களோடு மாத்திரம் மட்டுப்பட்டுவிடக் கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சி மாவட்டசெயலகத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பில் கூட்டம்

கிளிநொச்சி, ஒக். 03

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் இடம்பெற்றது.

வடகீழ் பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அத்துடன் மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முக்கிய இடங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டன.

மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட டெங்குப் பரவல், டெங்கைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி கே. றஞ்சன் டெங்கு நோய்த் தாக்கம் மற்றும் மாவட்டத்தின் தற்போதைய டெங்கு நிலைமை தொடர்பில் விளக்கமளித்தார். கூட்டத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தொண்டு நிறுவன உத்தியோகத்தர்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# தோட்டத் தொழிலாளர் வேதனத்தை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்துங்கள்!

## வேலுகுமார் கோரிக்கை



கொழும்பு, ஒக். 03

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 2,000 ரூபாயாக நிர்ணயிப்பதற்கு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வைத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் இதனை கூறினார்.

கடந்த கால வேதன பேச்சின் போது, தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கங்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 2000 ரூபாயை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தற்போது ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பதவி ஏற்றுள்ள நிலையில், அந்த கோரிக்கையை அமுல்படுத்த வேண்டும் என்று வேலுகுமார் தெரிவித்தார். (அ)

# பஸ் கட்டணம் அறவிடும் விடயத்தில் புதிய தொழில்நுட்பம் மிக அவசியம்

## பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

பஸ் கட்டணம் அறவிடும் விடயத்தில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலை குறைக்கப்பட்டதையடுத்து பேருந்து கட்டணங்களையும் நாம் குறைத்துள்ளோம். ஆயினும் மிகுதிப் பணத்தை நடத்துநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதில் பிரச்னை காணப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. பொதுமக்களிடமிருந்து தொடர்ச்சியாக இவ்வாறான முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பயணிகள் பணமாக கட்டணத்தை செலுத்தாமல் வங்கி அட்டைகள் அல்லது வேறு பிரத்தியேக அட்டைகளைப் பயன்படுத்தும் முறை அவசியமாகும். இது குறித்து கடந்த காலங்களில் நாம் அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தோம். ஆனால் அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. நாட்டில் சில்லறைப் பணத்தின் பயன்பாடு மிகக் குறைவாக உள்ளது. இந்நிலையில் மிகுதிப் பணத்தை வழங்குவதில் உள்ள நடைமுறைப் பிரச்னையை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (அ)

கடவுச்சீட்டு கொள்வனவு விவகாரம்;

# விதிக்கப்பட்ட இடைக்கால தடையை மாற்றுவதற்கு நீதிமன்றும் உத்தரவு!

கொழும்பு, ஒக். 03

7 இலட்சத்து 50,000 கடவுச்சீட்டுகளைத் தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்வதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் மீள அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடைக்கால உத்தரவின் காரணமாகக் கடவுச்சீட்டு வழங்குவது தொடர்பில் சிக்கல் எழுந்துள்ளமையினால் குறித்த இடைக்கால உத்தரவை மாற்றுமாறு சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன கோரினார். இதன்படி, மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தைக் கருத்தில் கொண்டு மனுதாரர் தரப்பான எபிக் லங்கா நிறுவனம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், குறித்த இடைக்கால உத்தரவை மாற்றுவதற்கு நீதிமன்றில் இணக்கம் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், ஐந்து மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை அடுத்த தவணை வரை நீடிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# யானையா? சிலிண்டரா? நாளை அறிவிக்கப்படும்!

## ஆசு மாரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் நாளைக்குள் அறிவிக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் இருந்து சிலிண்டர் சின்னத்தைப் பெற முடியுமாயின், பொதுத் தேர்தலில் எரிவாயு சின்னத்தில் போட்டியிடுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சிலிண்டர் சின்னம் கிடைக்காவிட்டால் யானை சின்னத்தில் போட்டியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியுட



னான பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சின்னம் தொடர்பில் நான் காம் திகதிக்கு முன்னர் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

அதேநேரம் கட்சியின் பொதுச் செயலாளர் உடல்நல குறைவு காரணமாகச் சிகிச்சைகளுக்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலதா அத்துக்கோரள கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கின்றோம்.

அதற்கு முன்னர் தற்போதைய செயலாளர் பதவி விலகவேண்டும்-என்றார். (அ)

# அதிகரிக்கப்பட்ட உர மானியத்தை 2 கட்டங்களாக வழங்கத் தீர்மானம்!

கொழும்பு, ஒக். 03

அதிகரிக்கப்பட்ட உர மானியத்தை 2 கட்டங்களாக வழங்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொதுத் தேர்தல் முடியும் வரை அதிகரிக்கப்பட்ட உர மானியத்தை இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவித்தலை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம். விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி ஜனாதிபதியினால் அதிகரிக்கப்பட்ட உர மானிய கொடுப்பனவு தேர்தலின் பின்னர் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகா வித்தியாலயத்துக்குள் நுழைந்து யானைகள் அட்டகாசம்!

## பாடசாலைக்கு பாதுகாப்பு கோரினார் அதிபர்





சம்மாந்துறை, ஒக். 03

**சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள் கட்டு மாணங்களைச் சேதப்படுத்தியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.**

நடுநிசியில் பாடசாலை வளாகத்தினுள் பின்பக்க மதிலை உடைத்து கொண்டு புகுந்த யானைகள் அங்கு சில நிமிடங்கள் அட்டகாசம் செய்தன. பின்னர் செல்லும் போது மற்றுமோர் மதிலை உடைத்து வெளியேறின.

இதுதொடர்பில் பாடசாலை அதிபர் எஸ். இளங்கோபன் கூறுகையில்,

"நள்ளிரவு வேளை காட்டு யானைகள் எமது பாடசாலையின் பின்பக்கத்தால் புகுந்து இந்த அட்டூழியத்தைச் செய்தன.

நான் அதிகாலையில் வந்து பார்த்தேன். மதில்கள் சேதமடைந்து காணப்பட்டன.

வலயக்கல்விப் பணிப்பாளர், கிராம சேவையாளர், பிரதேச செயலாளர், பொலிஸார் போன்ற தரப்பினர்களுக்கு நடந்ததை தெரியப்படுத்தினேன்.

எனவே, அரசாங்கம் எமது பாடசாலைக்கு பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவதுடன் நஷ்ட ஈட்டையும் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

அம்பாறையில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. வேளாண்மை அறுவடை முடிந்த பின்னர் யானைகளால் அடிக்கடி இவ்வாறு சேத மேற்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

(எ)

# சம்மாந்துறையில் சிறுவர் தின விழா

சம்மாந்துறை, ஒக். 03

சம்மாந்துறை வலய மட்ட சர்வதேச சிறுவர் தின விழா வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் வழிகாட்டலில் சம்மாந்துறை அல். முனீர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எல். றஹீம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யாசீர் அரபாத், எச். நைரூஸ்கான், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். சபூர்த்தம்பி, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான மௌலவி அஷ்ரப்பலாஹி, அகமட்லெவ்வை, ரஷீத், சஜாத் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதில் பெருந்திரளான மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

(எ)



# சுகாதார அமைச்சின் மீளாய்வு கூட்டத்தில் ஆளுநர் பங்கேற்றார்



மட்டக்களப்பு, ஒக். 03

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

அமைச்சின் பதில் செயலாளர் என். சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பங்கேற்றார். இதன்போது, சுகாதார - சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள் அமைச்சால் இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற செயல்திட்டங்கள் தொடர்பிலும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அது தொடர்பான விளக்கங்களை அமைச்சின் பதில் செயலாளர் என். சிவலிங்கம் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் முன்வைத்தனர்.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல். பி. மதநாயக்க, பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஏ. எம். எம். றபிக், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என். தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர், மருத்துவர் எம். ஏ. நபீல், சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் றியாஸ் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ)

# ஹெரோயினுடன் கைதானவர் ஏழு நாட்கள் தடுப்புக்காவலில்





சாய்ந்தமருது, ஒக். 03

சாய்ந்தமருது சந்தைத்தொகுதியில் வாடகை வாகனங்களை வழங்குகின்ற நிறுவனம் எனும் பெயரில் போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்த உரிமையாளரை ஏழு நாட்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தை தொகுதியின் மேல் மாடியில் அண்மையில் திறக்கப்பட்ட வாடகை வாகனங்களை வழங்குகின்ற நிறுவனத்தை நடத்தும் நபரையே கல்முனை விசேட அதிரடிப் படையினர் 15 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்தனர்.

இந்த நிலையில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப் படையினரால் சந்தேக நபர் உட்பட சான்றுப்பொருட்கள் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

இதற்கமைய குறித்த வழக்கு திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம். எஸ். எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 07 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

மேலும், இந்த கைது நடவடிக்கையை விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் ஏ. எஸ். பி. குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார, அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஆர். ஏ. டி. சி. எஸ். ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 ஏவுகணைகளை செலுத்தி இஸ்ரேல்மீது ஈரான் தாக்குதல்

## இலட்சக்கணக்கானோர் பதுங்குகுழிகளில் தஞ்சம்



ஜெருசலேம், ஒக். 03

**இஸ்ரேல் மீது ஈரான் இராணுவம் 400 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் இலட்சக்கணக்கான இஸ்ரேலியர்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.**

தலைநகர் டெல் அவில் உள்ளிட்ட முக்கிய நகரங்களை குறிவைத்து வீசப்பட்ட இந்த ஏவுகணைகளால் அங்குள்ள இலட்சக்கணக்கான பொதுமக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தனர். அடுத்த அறிவிப்பு வரும் வரை அவர்களை அங்கிருந்து வெளியே வரவேண்டாம் என்று இஸ்ரேல் இராணுவம் கேட்டுக் கொண்டுள்ளது. வானில் பறந்து வரும் ஏவுகணைகளை வழியிலேயே தடுத்து அழிக்கும்பொருட்டு அதிநவீன கருவிகள் தயாராக இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "ஈரானில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் வீசப்பட்டுள்ளன. இஸ்ரேலியர்கள் விழிப்புடன் இருக்கவும், அரசின் உத்தரவுகளை சரியான முறையில் பின்பற்றவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இஸ்ரேல் குடிமக்களைப் பாதுகாக்க தேவையான அனைத்தையும் இஸ்ரேல் இராணுவம் செய்து வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 'இந்தத் தாக்குதலுக்கான பின்விளைவுகளை ஈரான் சந்திக்க நேரிடும் என்றும், இதற்கான பதிலடி சரியான நேரத்தில் சரியான இடத்தில் கொடுக்கப்படும் என்றும் இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.



# இஸ்ரேலின் தலைநகரில் பயங்கர துப்பாக்கிச்சூடு

## பலர் உயிரிழந்தனரெனத் தகவல்

டெல் அவில், ஒக். 03

இஸ்ரேலின் தெற்கு டெல் அவில் நகரில் பயங்கர துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்தனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது.

தெற்கு டெல் அவில் நகரில் உள்ள யாபா பகுதியில் இரண்டு மர்ம நபர்கள் திடீரென பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் பலர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது. 10இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட இரண்டு மர்ம நபர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் ஏதேனும் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களா என்றும் விசாரணை நடைபெற்று வருகிறது. ரயில் நிலையம் அருகே மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் நடந்த இந்தத் தாக்குதலில் ஏராளமானோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. எனினும் உயிரிழந்தவர்கள் குறித்த சரியான எண்ணிக்கை இன்னும் வெளியாகவில்லை.

# ஈரானுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

ஜெருசலேம், ஒக். 03

இஸ்ரேலை நோக்கி ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், இதற்கான விலையை அந்த நாடு கொடுக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலை நோக்கி வரும் ஏவுகணைகளை வழியிலேயே தடுத்து வீழ்த்துமாறு அமெரிக்க இராணுவத்துக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். மேலும், இதற்கான பதிலடி எவ்வாறு இருக்கும் என்பது குறித்து இஸ்ரேல் பிரதமருடன் ஆலோசிக்க இருப்பதாகவும், இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் முழு ஆதரவு இஸ்ரேலுக்கு உண்டு என்றும் பைடன் தெரிவித்தார்.

ஈரானின் ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, "ஈரான் மிகப் பெரிய தவறை செய்து விட்டது. இதற்கான விலையை அந்த நாடு கொடுக்கும். முன்னதாக யாபா பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டிலும் தெஹ்ரானின் (ஈரான் தலைநகர்) தலையீடு இருக்கிறது. நம்மை தற்காத்துக் கொள்ளும் நம்முடைய உறுதியை ஈரான் புரிந்து கொள்ளவில்லை.

இஸ்ரேலை நோக்கி ஈரான் நூற்றுக் கணக்கான ஏவுகணைகளை வீசியுள்ளது. ஆனால், அவர்களின் இந்தத் தாக்குதல் தோல்வியடைந்து விட்டது. உலகிலேயே அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட இஸ்ரேல் விமானப் படையால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. அமெரிக்காவின் ஆதரவுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். லெபனான், காஸா உள்ளிட்ட எல்லா இடங்களிலும் தீய சக்திகளுடன் நாங்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய வீரர்கள் அங்கு தீவிரமாக களமாடி வருகின்றனர். முன்னெப்போதையும் விட ஐயத்துல்லாவின் இருண்ட ஆட்சிக்கு எதிராக உலக சமூகம் இஸ்ரேலுடன் ஒன்றிணைய வேண்டும்"- என்றார்.

(எ)





# இஸ்ரேல் - லெபனான் எல்லையில் அணிவகுத்து நிற்கும் 100 பீரங்கிகள்

பெய்ரூட், ஒக். 03

லெபனானில் தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், 100இற்கும் மேற்பட்ட இஸ்ரேல் பீரங்கிகள் லெபனான் எல்லைக்குள் நுழைந்து, ஹிஸ்புல்லா முகாம்களை தரைமட்டமாக்கி வருகின்றன.

இந்தச் சூழலில் ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள், இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து தொடர் தாக்குதல் நடத்தி வந்தனர். இரு தரப்புக்கும் இடையே கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தீவிரபோர் நடைபெற்றது. இதில் லெபனானில் 1,100 பேரும், இஸ்ரேலில் 165 பேரும் உயிரிழந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே லெபனான் எல்லையில் 100இற்கும் மேற்பட்ட பீரங்கிகள் அணிவகுத்து நிற்கின்றன.



இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறியவை, தெற்கு லெபனான் பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பினர் சுரங்கப் பாதை அமைத்து இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களை முழுமையாக அழிக்க இஸ்ரேல் இராணுவ பீரங்கிகள் கடந்த 30ஆம் திகதி இரவு லெபனான் எல்லைக்குள் நுழைந்தன என்று அந்த வாட்டாரங்கள் கூறின.

இதற்கிடையே, அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் கூறுகையில், "லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் கட்டமைப்புகளை அழிப்பது காலத்தின் கட்டாயம். இந்த விவகாரத்தில் ஈரான் தலையிடக் கூடாது. இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக தாக்குதல் நடத்தினால் மிக கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழ் வெளியிட்ட செய்தியில், 'இஸ்ரேலின் பாதுகாப்புக்காக மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவத்தின் 40, 000 படையினர் முகாமிட்டுள்ளனர். தற்போது கூடுதலாக 3,000 படையினர், எவ் - 15, எவ் - 16, எவ் - 22 ரக போர் விமானங்களும் மத்திய கிழக்குப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. போரால் பாதிக்கப்பட்டுள்ள லெபனான் மக்களுக்காக அமெரிக்க அரசு சார்பில் 838 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# திடீரென தீக்கிரையான பேருந்து 20 மாணவர்கள் உட்பட 23 பேர் பலி

பாங்கொக், ஒக். 03

தாய்லாந்தில் பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்து திடீரென தீப்பற்றிய விபத்தில் 23 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பேருந்தில் 6 ஆசிரியர்கள் உட்பட மொத்தம் 44 பேர் பயணித்தனர். கு கோட்நகரில் பேருந்து திடீரென தீப்பற்றியது. [illegible] வியதில் 20 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.



(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார முன்னேற்றத்துக்கு அநுரவின் தலைமைத்துவம் உதவும்

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர்

கொழும்பு, ஒக். 03

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா நேற்று முன் தினம் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், இலங்கையில் அமைதியான மற்றும் ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்தியமைக்காக இலங்கை மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் வாழ்த்துச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை சுட்டிக்காட்டிய அசகாவா, பல ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களிலும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதிலும் ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியான பங்காளியாக இருந்து வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமைத்துவமானது, இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வலுவாக முன்னோக்கி கொண்டு செல்ல உதவும் எனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கையுடனான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் இலங்கை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வேலைத்திட்டத்தை புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நிறைவேற்ற முடியும் எனவும் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 167 சட்டங்கள் நிறைவேற்றம்!

கொழும்பு, ஒக். 03

2020 ஒகஸ்ட் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2024 செப்ரெம்பர் 24ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தில் 167 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அரசாங்க சட்டங்கள் மொத்தமாக 146, தனியார் உறுப்பினர் சட்டங்கள் 21 ஆகும்.

இதற்கமைய 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 06ஆம் இலக்க பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலக சட்டம், 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டம், 21ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 28ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு (திருத்தம்) சட்டம், மற்றும் 2024ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம், 36ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம், 37ஆம் இலக்க பெண்களின் வலுவூட்டல் சட்டம், 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டம், 45ஆம் இலக்க பொருளாதார நிலைமாற்றம் சட்டம் உள்ளிட்டவை இக்காலப் பகுதியில் நிறைவேற்றப்பட்ட குறிப்பிடத்தக்க சட்டங்களாகும். (அ)

# ரணிலின் தலைமையில் விசேட கலந்துரையாடல்!

## பொதுத் தேர்தல் குறித்து

கொழும்பு, ஒக். 03

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்னயாக,ஜனாதிபதியின் முன்னாள் தொழிற்சங்கப் பணிப்பாளர் சமன் ரத்னபிரிய மற்றும் முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித் சேனாரத்ன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் போது பொதுத்தேர்தலில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் சமன் ரத்னபிரிய-

காஸ் சிலிண்டர் சின்னத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாக உள்ளது. அவ்வாறு இல்லை என்றால் கட்சியின் சிக்கமான யானை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாடும் முன்வைக்கப்பட்டுள்ளது. எந்த சின்னத்தில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவது என்ற கலந்துரையாடல் நிறைவு பெற்றுள்ளது. அதிகளவானோருக்கு காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற விருப்பே உள்ளது. ஆகவே பெரும்பாலும் எரிவாயு சிலிண்டர் சின்னத்திலேயே பொதுத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தியினருடனும் கலந்துரையாடல்கள் தொடர்கின்றன. அவர்கள் அவர்கள் கோரும் சில நிபந்தனைகளுக்கு எம்மால் உடன்பட முடியாது-என்றார். (அ)

# கரைதுறைப்பற்று பிரதேச செயலக பண்பாட்டு விழா முல்லைத்தீவில்!

முல்லைத்தீவு, ஒக். 03

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை, கரைதுறைப்பற்று கலாசார பேரவை இணைந்து நடத்திய, பிரதேச பண்பாட்டு விழா நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ம. உமாமகள் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர்கள், தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு கலை நிகழ்வுகளின் ஆற்றுகையுடன், முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்துக்கு அருகில் இருந்து, கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டு, அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம் ஆகியோர், பிரதம விருந்தினர்களாக பங்கேற்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலாமன்றங்களின் கலை நிகழ்வுகளோடு, கலைப் பணியாற்றியவர்கள், இளம் கலைஞர்கள் என பலரும் கௌரவிக்கப்பட்டதுடன்,

கலைப்பணியாற்றிய மூத்த கலைஞர்கள் சிலருக்கு, முல்லைப் பேரொளி விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண பண்பாண்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.ஜசிந்தன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மூத்த கலைஞர்கள், பொது மக்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

# டெங்கு தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

## வைத்தியர் எஸ்.கேதீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 03

மழைக் காலத்தில் டெங்கு நோய்ப் பரவல் ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாகவும், டெங்கு நோய் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் நீர் தேங்கி இருக்கும் இடங்களை சுத்தம் செய்து, நுளம்புக் குடம்பிகள் பெருகுவதை இல்லாது செய்வது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் பொது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும், டெங்கு நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்கள் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுவது அவசியம் எனவும் யாழ் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ)

# பிடியாணையில் கைதாகிய நண்பனை பார்க்க கசிப்புடன் சென்ற இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 03

பிடியாணையில் கைது செய்யப்பட்ட கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகர் பகுதியை சேர்ந்த நண்பனை பார்க்கச் சென்ற இரு நண்பர்கள் கசிப்புடன் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உதயநகர் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு, கிளிநொச்சி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த நிலையில், குறித்த நபரை பொலிஸார் கைது செய்தனர். இவ்வாறு பிடியாணையில் கைது செய்யப்பட்ட நபரை பார்ப்பதற்காக பரந்தன் பகுதியில் இருந்து குளிர்பானத்துடன் சென்ற 19 வயதுடைய இரு இளைஞர்களை கடமையில் இருந்த பொலிஸ் பரிசோதகர் பரிசோதனைக்கு உட்படுத்திய வேளையில் நண்பனுக்காக கொண்டு சென்ற குளிர்பானத்தில் கசிப்பு கலந்திருந்தமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முட்படுத்தப்பட்டபோது ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ)

# தமிழ்த் தரப்பு பிரிந்து செயற்பட்டால் ஆசனங்களை இழக்கவேண்டி வரும்!

## செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டு

வவுனியா, ஒக். 03

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தரப்பு பிரிந்து செயற்படுமாக இருந்தால், ஆசனங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்திய தூதுவர், ஒற்றுமையாக அதிக ஆசனங்களை பெற்றுக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியதாகவும் கூறினார்.

இந்திய தூதுவருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோத கடற்றொழில்களை நிறுத்த கோரி ஆளுநருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக். 03

சட்டவிரோத கடற்றொழில்களை நிறுத்துமாறு கோரி, வடக்கு மாகாண கட்றொழிலாளர் இணையத்தினர் மற்றும் தீவகப் பகுதி மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து நேற்று முன் தினம் வடக்கு மாகாண ஆளுநரிடம், மகஜர் கையளித்துள்ளனர்.

உள்ளூர்சட்டவிரோத இழுவை மடி தொழிலாளர்களால், அனலைதீவு மற்றும் எழுவைதீவு மீனவர்கள், தொடர்ச்சியாக பாதிப்படைந்து வருகின்றனர்.

இதனால், இழுவைமடி தொழில், யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதை நிறுத்துமாறு கோரி, வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அ.அன்னராசா, அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் யோன் போஸ்கோ, எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் இணைந்து, ஆளுநரிடம் மகஜரை கையளித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

சின்னத்திலோ போட்டியிடத் தயாராக உள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிவாயு சிலிண்டர் சின்னத்தை பெறுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கோரியுள்ளதாகவும், அதன் முடிவு கிடைத்ததும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் மற்றும் கூட்டணி தொடர்பில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பிலுள்ள தேர்தல் செயல்பாட்டு அலுவலகத்தில் கூடினர்.

இதன்போது, எரிவாயு சிலிண்டர் சின்னத்தைப் பெற முடியாவிட்டால், யானை சின்னத்தின் கீழ் போட்டியிடலாம் என தீர்மானித்ததாக அறியக் கிடைத்துள்ளது. (எ)

## இரு கரங்களை....

கண்டறிந்து தண்டனை வழங்குவது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் இரு கரங்களை உயர்த்தி ஆதரவு வழங்குவோம்" -இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி அநுரகுமார அவர்களே! தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையகத் தமிழருக்கும் ஈழத் தமிழருக்கும் இனிமேல் இந்த நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் 200 வருடங்கள் வாழ்ந்து விட்ட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு ஓர் அங்குலம் நிலம்கூட இல்லை என அனுதாபப்பட்டு நீங்கள் தேர்தலுக்கு முன் பேசிய ஊடக காணொலியை கண்டேன். மலையக மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ளவும், வாழ்வாதார தேவைகளுக்காகவும் காணி வழங்குங்கள். காணி உரிமை வழங்கி அவர்களை இலங்கை தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டு வாருங்கள். உங்கள் சிஷ்டம் சேஞ் என்ற முறை மாற்றத்தை பெருந்தோட்ட துறையில் ஆரம்பித்து, நமது மக்களை பெருந்தோட்ட தொழிலில் பங்காளி ஆக்குங்கள்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு ஈழத்தமிழ் மக்கள் பற்றியும் நீங்களும், உங்கள் கட்சியாளர்களும் அனுதாபப்பட்டு பேசியுள்ளதை கண்ணுற்றேன். ஆகவே, அரசியல் கைதிகளை விடுவியுங்கள். இப்போதுதான் யுத்தம் இல்லையே? ஆகவே, விடுக்கப்படாத அனைத்து தனியார் காணிகளையும் உடன் விடுவியுங்கள். காணாமல் போனார் பற்றிப் பேசியுள்ளீர்கள். அவர்களின் குடும்பத்தவருக்கு நியாயம் வழங்குங்கள். உடனடியாக அங்கே மாகாண சபை தேர்தல்களை நடத்துங்கள். மாகாண சபை தேர்தல்களை நடத்தும்படி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டு கேட்டு நான் அலுத்தே போய் விட்டேன்.

ஆகவே, ஜனாதிபதி அநுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையகத் தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்த நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்.

சர்வதேச சிறுவர் தினத்தன்று, வவுனியாவில் ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்களை, தான் அநுரவின் ஆள் என்று கூறி ஒரு காடையர் மிரட்டியுள்ளார். இனிமேல் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை செய்ய விட மாட்டோம் எனவும் கூறியுள்ளார். இதை கூறி நான் அரசியல் நோக்கில் உங்களை ஒருபோதும் குற்றஞ்சாட்டவில்லை. ஆனால், உங்கள் பெயரை பகிரங்கமாக பயன்படுத்தி, பெண்களை மிரட்டி, பயமுறுத்தியுள்ள இந்த நபரை உனடியாக கைது செய்யுங்கள்"- என்றார். (எ)

## ஐ. எம். எவ்....

தொடர்புகளை மேலும் பலப்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும்

சமுத்திர பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் இலங்கைக்கு, அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும் உயர்ஸ்தானிகரால் உறுதியளிக்கப்பட்டது.

அதேபோன்று, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பலப்படுத்திக்கொள்ளும் தீர்மானமிக்க காரணியாக விளங்கும் பொருளாதார வெளிப்படைத்தன்மையை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் ஆஸி உயர்ஸ்தானிகர் வலியுறுத்தினார். (எ)

## இலங்கை...

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி உள்ளடங்கலாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு, தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிட்டமை, தேர்தல் முடிவு உள்ளிட்ட விடயங்கள் குறித்து சுமந்திரனிடம் தூதுவர் கேட்டறிந்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் ஜூலி சங் வினவினார். இவற்றுக்குப் பதிலளித்த சுமந்திரன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்க செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்தல் என்பன உள்ளடங்கலாக சில நேர்மறையான வாக்குறுதிகளை புதிய அரசாங்கம் வழங்கியிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இதன்போது, ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பங்கள் தம்மிடம் இருப்பதாகவும், அதனை அரசாங்கத்துக்கு வழங்கி உதவுவதற்குத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியால் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியுமா? எனவும் ஜூலி சங் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அரசாங்கம் அமைப்பதற்குத் தேவையான சாதாரண பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தியால் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புவதாகவும், இருப்பினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுவதாகவும் கூறினார். (எ)

## திருமலை...

உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னரே இது தொடர்பான யோசனையை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முன்வைத்திருந்தது.

இந்தநிலையில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் அவர்களது தீர்மானம் அறிவிக்கப்படும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவிக்கிறது.

அதேநேரம் இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 5ஆம் திகதி கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பொன்று [illegible] இடம் பெற்றுள்ளது. (அ)

# கடன் மறுசீரமைப்புக்கு சீனா ஆதரவு வழங்கும்

கொழும்பு, ஒக். 03

வர்த்தகக் கடன் வழங்குநர் மற்றும் இரு தரப்பு கடன் வழங்குநர் என்ற வகையில் கடன் மறுசீரமைப்புச் செயல்பாடுகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ. ஷென்ஹொங் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி அநுரவின் தேர்தல் வெற்றிக்கு மனப்பூர்வமான வாழ்த்து தெரிவித்த தூதுவர், இலங்கையின் எதிர்காலச் செயல்பாடுகளுக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமெனவும், சீன அரசாங்கத்துடனான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த அர்ப்பணிப்பதாகவும் உறுதியளித்தார்.

இலங்கைக்குள் தற்போது ஒத்துழைப்பு அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முக்கியத்துவம் மற்றும் இலங்கையின் அபிவிருத்திச் செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பதற்காக சீன அபிவிருத்தி வங்கி (சி. டி. பி.) மற்றும் எக்சிம் வங்கியின் செயல்திறனான தலையீடுகள் குறித்தும் சீனத் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மை மற்றும் அபிவிருத்திக்கு ஒத்துழைக்கும் வகையில் பிரதான வர்த்தகக் கடன் வழங்குநர் மற்றும் இரு தரப்பு கடன் வழங்குநர் என்ற வகையில், கடன் மறுசீரமைப்புச் செயல்பாடுகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் சீனத் தூதுவர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார். (எ)

## நாளை வருகிறார்...

இந்தப் பயணத்தின்போது, டில்லி வருமாறு இந்திய பிரதமர் மோடியின் அழைப்பை, ஜனாதிபதி அநுரவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கையளிக்கவுள்ளார்.

அதேவேளை, தமிழ்க் கட்சிகளுடனும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## தனது குற்றச்...

உகண்டா மற்றும் சீஷெல்ஸ் உட்பட பல்வேறு நாடுகளில் பொது நிதிகள் கொள்ளையிடப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி முன்னர் தெரிவித்த கூற்றுக்களின் காணொலி காட்சிகளை அவர் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்து அதனை நிரூபிக்குமாறு சவால் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்கவேண்டிய நேரம் இதுவென்றும் நாமல் ராஜபக்சஷ பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில்- "உகண்டா மற்றும் பல்வேறு நாடுகளில் பில்லியன் கணக்கான டொலர்களை நாங்கள் பதுக்கி வைத்துள்ளோம் என்று ஜனாதிபதியும் அவரது குழுவும் பல ஆண்டுகளாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஜனாதிபதி தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய நேரம் இது- என பதிவிட்டுள்ளார். (அ)

## ஜனநாயக த. தே....

26 ஆயிரத்து 343 வாக்குகளை பெற்றிருந்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த பெரும்பான்மை கட்சிகளை கொண்ட கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிட விரும்பியது. இதைத் தொடர்ந்து, தனது வழக்கமான குத்துவிளக்கு சின்னத்துக்கு பதிலாக சங்கு சின்னத்தை கோரி தேர்தல்கள் திணைக்களத்துக்கு விண்ணப்பித்தது. தற்போது தேர்தல்கள் திணைக்களம் சங்கு சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒதுக்கியுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பொது அமைப்பான தமிழ் மக்கள் பொதுச் சபை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி போட்டியிட எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தோல்வி பயத்தால்...

களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறினார்.

எமது வழிநடத்தலும் அதனை முன்னெடுத்துச் செல்லும் பொறிமுறையும் தான் சரியானது என கடந்த காலங்களில் மக்கள் எமது பாதையை நோக்கி அணி திரளத் தொடங்கியதை கண்டு அச்சமுற்ற தரப்பினர், அரசியல் ரீதியில் நேருக்கு நேர் நின்று வெற்றி கொள்ள முடியாதுபோன காரணத்தால் எம்மை தோற்கடிப்பதற்காக பல்வேறு அவதூறுகளையும் சேறு பூசல்களையும் வாரி இறைத்தனர்.

அத்தகையவர்களது குறித்த செயற்பாடுகளால் தோற்கடிக்கப்பட்டது எமது மக்களும் மக்களது அபிலாசைகளுமே தவிர நாமல்லர். நாம் என்றும் தனித்துவத்துடன் தடம் மாறாத கொள்கையுடன் எமது செயற்பாடுகளை மக்களிடம் கொண்டு சென்று வருகின்றோம்.

அதனால்தான் கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் என்னை தமது பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு தொடர்ச்சியாக அனுப்பி வருகின்றனர்.

இதேநேரம் தமிழ் மக்களிடம் நீண்ட காலமாக [illegible] அதிகளாவான பாராளுமன்ற அரசியல் அதிகாரங்களை தருமாறும் அவ்வாறு கிடைக்கப் பெற்றால் நிச்சயமாக தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தும் ஈடேறும் என்றும் கூறிவருகின்றேன்.

ஆனாலும் இதுவரை அந்த அரசியல் பலத்தை தமிழ் மக்கள் எம்மை நோக்கி தரவில்லை என்பது கவலையான விடயம். அதேபோன்று தமிழர் தேசப்பரப்பில் இற்றைநாள்வரை புரையோடிப்போயுள்ள போலித் தேசியத்துக்கும் சுயநல அரசியல் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து மாற்றத்தை கொண்டுவர தமிழ் மக்கள் நினைக்கின்றனர்.

எம்மிடம் சுயநலமற்ற தடம் மாறாத கொள்கை இருக்கின்றது. அதனை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலும் சிறந்த தலைமைத்துவ வழிகாட்டலும் இருக்கின்றது.இதை கடந்தகால வரலாறுகளே சாட்சி சொல்லும்.

அந்தவகையில் மத்தியில் ஏற்பட்டதைப்போன்று தமிழ் அரசியல் பரப்பிலும் மாற்றத்தை கொண்டுவர மக்கள் தற்போது முயற்சிப்பதை கண்டு குறிப்பாக அந்த மாற்றம் எம்மை நோக்கியதாக இருப்பதை கண்டு அச்சமுற்றுள்ள இதர சுயநல தமிழ் அரசியல் தரப்பினரும் சில இலத்திரனியல் சமூக ஊடகங்களும் மீண்டும் எம்மை நோக்கி தவறான பிரசாரங்களையும் சேறடிப்புகளையும் மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# விஜித ஹேரத்தை சந்தித்த ஜூலி சங்



கொழும்பு, ஒக். 03

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று சந்தித்துள்ளார்.

இது குறித்து அவர் சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரை அவரது புதிய பதவியில் சந்திக்க முடிந்துள்ளமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

அமெரிக்க இலங்கை கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பு, வர்த்தகம், மனித உரிமைகளை உறுதி செய்தல் போன்ற பகிரப்பட்ட முன்னுரிமைகளில் இணைந்து செயற்படுவதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

தேசிய ஐக்கியம், நீதி மற்றும் வெளிப்படை தன்மை மிக்க ஆட்சி ஆகியவற்றில் இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவுவது குறித்து அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது - என்றுள்ளது. (அ)

# எதிர்கால அரசியலுக்கான புதிய திசையை கட்சிகள் இணைந்து தீர்மானிக்கவேண்டும்

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 03

**அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளை தீர்மானிக்க வேண்டும் என யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட குருக்கள் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

புதிய மாற்றத்தை வேண்டி தமிழ் மக்களே தமிழ் அரசியல் கட்சிகளே, நாம் ஓர் இனமாக வரலாற்றுப் பெரும் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய தருணத்தில் நிற்கிறோம். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னணியில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல், தமிழ் மக்கள் மத்தியில் பெருமாற்றத்துக்கான எதிர்பார்ப்புகளை தூண்டியிருக்கிறது.

சமகால அரசியல் கட்சிகளின் உடைவுப் போக்குகள், உட்கட்சி குழப்பங்கள், தீர்க்கமான அரசியல் தெளிவற்ற தன்மை போன்ற பல காரணிகளால் தமிழ் மக்களிடையே குழப்பங்களும் வேதனையும் நீடிக்கின்றன. இந்நிலை தொடருமானால் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் கணிசமான அளவு தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகளை தக்கவைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

"அநுர" எனும் அலையைத் தொடர்ந்து "மாற்றம்" என்பது மந்திரச் சொல்லாக பலராலும் உச்சரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இந்த வரலாற்றுத் திருப்புமுனையில் நின்றுகொண்டு புதிய வியூகங்களை வகுக்க வேண்டியது எமது தார்மீக வரலாற்று கடமையாக உள்ளது. வரலாற்று சறுக்கலை மீண்டும் ஒருமுறை நிகழவிடாது எமது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளை தீர்மானிக்கவேண்டும்.

எம்மிடையே இருக்கும் பிளவுகள், வேற்றுமைகள், சாதி, சமய, பிரதேசவாதங்களை தாண்டி நகரவேண்டிய இடத்தில் வரலாறு எம்மை தற்போது நிறுத்தியுள்ளது. குறிப்பாக பாரம்பரிய அரசியல் பிரதிநிதிகள் புதிய அரசியல் போக்குக்கு இடம்விட்டு நகர்ந்து அர்ப்பணிப்புள்ள நேர்மையான ஊழலற்ற இளையோர்களை உள்வாங்கி வழிநடத்துவது பெரும் மாற்றம் ஒன்றுக்கான சிறந்த முன்மொழிவாக இருக்கும்.

மைய ரோட்டு அரசியலை தாண்டி கிராமமட்ட சமூக அமைப்புக்களின் கருத்துக்களை உள்வாங்கி வேட்பாளர்களை தெரிந்தெடுப்பது மிகச்சிறந்த நகர்வாக இருக்குமென்பதுடன், பால்நிலை சமத்துவம், பெண் பிரதிநிதித்துவம் குறித்தும் கருத்தில் எடுக்கவேண்டியதும் அவசியமாகும். செல்திசை தெரியாது தடுமாறும் அவல நிலையில் உள்ள தமிழ் இனத்திற்கு சரியான திசைகளை காட்டுவது எமது வரலாற்று கடமையென்பதை உணர்ந்துகொள்ளுவோம்.

தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் எமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்துபோகக்கூடிய ஆபத்து அண்மித்துள்ள இவ்வேளையில் ஊழலற்ற நேர்மையான அரசியல் போக்கு குறித்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு புதிய மாற்றத்தை வேண்டி நிற்கின்றது.

நேர்மையான அரசியல் தெளிவு மிக்க ஒரு புதிய அரசியல் நகர்வை மேற்கொண்டு ஒரு தேசிய இனமாக எழுந்து நின்றால் மட்டுமே தமிழ் இனம் தன் இருப்பின் உரிமைகளுக்கான பேரம் பேசும் சக்தியாக எழுந்து நிற்க முடியும் என்பதையும் பேரன்போடு வலியுறுத்துகின்றோம்-என்றுள்ளது. (அ)

# யுத்தத்தில் மரணித்தோருக்கு நினைவு தூபி அமையுங்கள்!

## ஜனாதிபதிக்கு அங்கஜன் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 03

யுத்தத்தால் மரணித்தோருக்கான நினைவுத் தூபியை அமைப்பதோடு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதிக்கு அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த கடிதத்தில்- யுத்தத்தினால் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் அனுபவித்த துன்பங்களை ஏற்று, அமைக்கப்படும் நினைவுத்தூபி முழு நாட்டின் ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை வலுப்படுத்துவதோடு நினைவேந்தலுக்கான அடையாளமாகவும் மாறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்குவதற்கும் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும் எனவும், இந்தச் சான்றிதழ்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சட்டச் சிக்கல்களைத் தீர்க்க உதவுவதோடு, இழப்பீடு மற்றும் பிற வகையான ஆதரவை அணுகுவதற்கும் உதவும் எனவும் அங்கஜன் கூறியுள்ளார். (அ)

# பிரதமரை சந்தித்தார் சந்தோஷ் ஜா



கொழும்பு, ஒக். 03

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் சமூக ஊடகப் பதிவில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்த இந்தியத் தூதுவர், அவரது பதவிக் காலத்துக்காக நல்வாழ்த்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

இலங்கை மக்களுக்கான இந்தியாவின் நிலையான அர்ப்பணிப்பு குறித்து இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன் பன்முக இரு தரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# வினோவும் இம்முறை போட்டியிடமாட்டார்!

வவுனியா, ஒக். 03

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அநுரகுமார திஸாநாயக ஜனாதிபதியானமை. இதைப்போலவே வடக்கு-கிழக்கில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர். அது புதியவர்களையும், இளையோரையும் பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்பதாகும். மக்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் இந்த மன மாற்றத்துக்கு நாம் தடையாக இருக்க முடியாது. அதற்கு வழிவிட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். என்னுடையதும் ஏனைய சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடாதிருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் என கருதுகின்றேன்.

வன்னி மாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள, ஆளுமைமிக்க இளம் தலைவர்களை பாராளுமன்றம் அனுப்பவேண்டும் என்ற மக்களின், இளைஞர்களின் விருப்பங்கள் நிறைவேற மக்கள் மனதறிந்து எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுத்துள்ளேன்-என கூறியுள்ளார். (அ)

# தமிழ், முஸ்லிம் கட்சிகளை இணைக்கும் முயற்சியை கைவிட்ட மனோ கணேசன்!

கொழும்பு, ஒக். 03

தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை இணைத்து ஒரே அணியாகத் தேர்தலை முகம் கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி கைவிடப்பட்டுள்ளதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கை மையப்படுத்தி இயங்குகின்ற தமிழ்த் தேசிய கட்சிகள், மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் முஸ்லிம்கள் கட்சிகள் என்பன இணைந்து ஒரு அணியாகச் செயற்படுவதற்கான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது.

இதற்கான பேச்சும் நடைபெற்றது. எனினும், அதற்குப் பின்னர் ஏனைய கட்சிகள் அது தொடர்பான முன்னெடுப்புகள் எதனையும் மேற்கொள்ளாதநிலையில், இந்தத் திட்டத்தைக் கைவிட்டிருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



எவ்வாறாயினும் பொதுத் தேர்தலில் பின்னர் இந்த கட்சிகள் அனைத்தும் புரிந்துணர்வுடன் செயல்பட முயற்சிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## எரிபொருள் தட்டுப்பாடில்லை!

கொழும்பு, ஒக். 03

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை என்று இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் டீ. ஜே. கருணாரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

தற்போது நாட்டில் இருக்கும் எரிபொருள் கையிருப்பானது எதிர்வரும் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை போதுமானதாகும்.

அத்துடன், அடுத்த கட்ட எரிபொருள் கையிருப்புக்கான ஆணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.